சேலம் மாநகராட்சி

2016 – 2017

விளைபயன்

வரவு – செலவு திட்டம்

சேலம் மாநகராட்சி

2016 - 2017

விளைபயன்

வரவு - செலவு திட்டம்

மாண்புமிகு மேயர்

திரு.எஸ். சவுண்டப்பன்

அவர்களின்

2016– 2017 ஆம் ஆண்டிற்கான

சேலம் மாநகராட்சி

விளைபயன்

வரவு – செலவு திட்டத்தின் மீதான உரை

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். —— **குறள்**

தன்னைச் சேர்ந்த குடிமக்களை உயர்வடையச் செய்திட ஓயாது உழைப்பவனுக்கு தெய்வச்செயல் எனக்கூறப்படும் இயற்கையின் ஆற்றல் கூட வரிந்துகட்டிக்கொண்டு வந்து துணைபுரியும்.

கல்விக்கழகு கசடற மொழிதல்
செல்வர்க்கழகு செழுங்கிளைதாங்குதல்
மன்னர்க்கழகு செங்கோல் முறைமை
மந்திரிக்கழகு வரும்பொருள் உறைத்தல்
உழவர்க்கழகு உழுதுண் விரும்பல்
உண்டிக்கழகு விருந்தோடுண்டல்
– **முதுமொழிகள்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்விக்காக எண்ணற்ற சலுகைகள் தந்து மற்ற மாநிலங்களை விட கல்வித் துறையில் தமிழ்நாட்டை வளர்ச்சியடையச்செய்துள்ளார். தொழில்துறையில் முன்னேற உலகத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி சாதனை படைத்துள்ளார் **மாண்புமிகு அம்மா** அவர்கள்.

சரியான, நேர்மையான முறையில் அரசாட்சி செய்து கொண்டிருப்பவர் **மாண்புமிகு அம்மா** அவர்கள் . அவருக்கு பக்க பலமாக அமைச்சர் பெருமக்கள் துணை நிற்கின்றார்கள். உழவர் சமுதாயத்திற்கு சலுகை பெறக்கூடிய வகையில் எண்ணற்ற திட்டங்களை அள்ளித்தந்துள்ளார் மாண்புமிகு அம்மா அவர்கள் திருக்கோயில்களில் ஏழை முதல் பணக்காரர்கள் வரை சமபந்தி அமர்ந்து சாப்பிடும் நிகழ்ச்சி **மாண்புமிகு அம்மா** அவர்களின் திட்டமாகும்.

சேலம் மாநகர மக்களுக்கு சேவை ஆற்றி, அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித்தர எனக்கு வாய்ப்பு வழங்கிய **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் பொற்பாதங்களில் எனது நெஞ்சார்ந்த நன்றி மலர்களை காணிக்கையாக சமர்ப்பிக்கிறேன்.

1866ல் சேலம் நகராட்சி தோற்றுவிக்கப்பட்டு, 1966ல் நூற்றாண்டு விழா எடுத்து , 1994ல் **தமிழக முதலமைச்சராக** இருந்த **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் மாநகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டு இன்று 2016ல் 23வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சியின் 2016–2017ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்ய எனக்கு வாய்ப்பளித்த **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களுக்கும், மேலும் இந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யும் மாமன்றக்கூட்டத்திற்கு வருகை தந்துள்ள அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது வணக்கத்தையும் , வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஒழுகாத வீடு கிழியாத சட்டை
பசியாற உணவு" இதுதான் என்கனவு – பேரறிஞர் அண்ணா

ஒழுகாத வீடு	–	பசுமை வீடு கட்டும் திட்டம்
கிழியாத சட்டை	–	பள்ளி மாணவ, மாணவிகளுக்கு ஆண்டுக்கு 4 செட் சீருடைகள்
பசியாற உணவு	–	மாதம் தோறும் 20 கிலோ விலையில்லா அரிசி

என பேரறிஞர் அண்ணா கண்ட கனவை நனவாக்கி, அண்ணா வழியில் நல்லாட்சி நடத்தி வருபவர் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள்.

உலகத்தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி சுமார் ரூ. 2,42,000 கோடி அளவிற்கு தொழில் முதலீடுகள் பெற்றுத்தந்தவர் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள்.

நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டுவதற்கு ஆணையிட்டு கலைத்துறைக்கு பெருமை சேர்த்தவர் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள்.

முன்னாள் விவசாயிகள் சங்கத்தலைவர் திரு. நாராயணசாமி நாயுடுவுக்கு மணிமண்டபம் கட்டுவதற்கு ஆணையிட்டு விவசாயப்பெருமக்களுக்கு பெருமை சேர்த்தவர் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள்.

4 ¾ ஆண்டு காலத்தில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயலாற்றி அத்தனை விவரங்களையும் சட்டமன்றத்தில் மிகத்தெளிவாக எடுத்துரைத்து நாட்டு மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் 1 ½ மணி நேரம் சட்டமன்றத்தில் பேசி வரலாறு படைத்தவர் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள்.

- பொதுமக்கள் தங்கள் குறைகளை தொலைபேசி மூலம் தெரிவித்து நிவர்த்திசெய்திட “ **அம்மா அழைப்பு மையம்** ”
- கருவுற்ற தாய்மார்கள் நலம் பேணும் “ **அம்மா சஞ்சீவி திட்டம்** ”
- பிறந்த குழந்தைகளுக்கு பாசத்தாயின் அன்புப்பரிசாக “ **அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம்** ”
- பேருந்து நிலையங்களில் பாலூட்டும் தாய்மார்களுக்கென தனி அறை ஒதுக்கீடு செய்து கட்டிக்கொடுத்தது.
- பச்சிளங்குழந்தைகள் பயன்பெறும் வகையில் **தாய்ப்பால் சேமிப்பு வங்கி** திட்டம்.
- குக்கிராமங்கள் தோறும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் “ **தாய் திட்டம்** ”
- சிறுவணிகர்களுக்கான வட்டியில்லா “ **அம்மா சிறுவணிக கடன் திட்டம்** ”
- போக்குவரத்து நெரிசல், கூட்டம் உள்ள இடங்களில் அவசர மருத்துவ உதவி அளிக்க **மோட்டார் சைக்கிள் ஆம்புலன்ஸ் திட்டம்.**
- ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் குடும்பம் ஒன்றுக்கு நாளொன்றுக்கு 20 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் “ **அம்மா குடிநீர் (Mineral Water) திட்டம்** ”
- மூத்த குடிமக்களுக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்ய இலவசபஸ் பாஸ் வழங்கும் திட்டம்.
- பெண்களும் நாட்டை வழிநடத்த வேண்டும் என்று உள்ளாட்சித்துறையில் 50 விழுக்காடுகள் பெண்களுக்கு ஒதுக்கித்தந்தவர் **மாண்புமிகு அம்மா** அவர்கள்.
- தமிழ்நாட்டில் மாவட்டந்தோறும் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி எண்ணற்றோர்க்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தந்தவர் **மாண்புமிகு அம்மா** அவர்கள்.

மேற்கண்ட எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி மற்ற மாநிலங்களுக்கு முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ, நல்வழி காட்டி வரும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொண்டு 2016–2017 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்தில் உங்கள் முன் சமர்ப்பிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

சேலம் மாநகராட்சி
2015-2016 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம்
வருவாய் கணக்கு

வரவு இனங்கள்			செலவு இனங்கள்		
வ. எண்	விபரம்	ரூபாய் இலட்சத்தில்	வ. எண்	விபரம்	ரூபாய் இலட்சத்தில்
1.	சொத்து வரி	2720.75	1.	மொத்த நிர்வாகச் செலவு	7646.64
2.	தொழில் வரி	580.50	2.	பொது பணிகள்	1552.30
3.	கேளிக்கை வரி	330.58	3.	குடிநீர் பராமரிப்பு	3269.69
4.	முத்திரைத்தாள் கட்டணம்	798.00	4.	மின்கட்டணம்	1120.20
5.	சொத்துக்கள் மூலம் வரவு	922.71	5.	தெருவிளக்கு பராமரிப்பு	175.50
6.	குடிநீர் விநியோக வரவு	1817.83	6.	பொது சுகாதாரம் மற்றும் மலேரியா	1031.18
7.	குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை	149.40	7.	நூலக வரி	149.00
8.	கட்டணங்கள் மூலம் வரவு	1111.63	8.	வாகனங்கள் பராமரிப்பு	455.97
9.	அரசு நிதி உதவி மற்றும் மானியம்	6453.98	9.	கட்டிடங்கள் பராமரிப்பு	87.46
10.	பாதாள சாக்கடை இணைப்பு வைப்புத் தொகை	204.87	10.	இதர செலவுகள்	209.65
11.	இதர வரவுகள்	607.34			
	மொத்த வரவினம்	**15697.59**		**மொத்த செலவினம்**	**15697.59**

சேலம் மாநகராட்சி
2015-2016 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம்
மூலதனக் கணக்கு

வரவு இனங்கள்			செலவு இனங்கள்		
வ. எண்	விபரம்	ரூபாய் இலட்சத்தில்	வ. எண்	விபரம்	ரூபாய் இலட்சத்தில்
1.	தன்னிறைவுத் திட்டம் (SSS)	55.10	1.	தன்னிறைவுத் திட்டம் (SSS)	55.10
2.	உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி	500.00	2.	உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி	500.00
3.	குடிநீர் விநியோக பராமரிப்பு	480.00	3.	குடிநீர் விநியோக பராமரிப்பு	480.00
4.	தனிக்குடிநீர் திட்டம்	2457.00	4.	தனிக்குடிநீர் திட்டம்	4906.93
5	13வது மற்றும் 14வது நிதிக்குழு மானியம்	1284.03	5	13வது மற்றும் 14வது நிதிக்குழு மானியம்	1284.03
6	ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM)	625.00	6	ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM)	625.00
7	நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP)	1122.00	7	நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP)	1122.00
8	திறந்தவெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை ஒழிக்கும் திட்டம்	20.00	8	திறந்தவெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை ஒழிக்கும் திட்டம்	20.00
9	இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி	100.00	9	இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி	100.00
10	சிறப்பு சாலைத் திட்டம்	1800.00	10	சிறப்பு சாலைத் திட்டம்	2500.00
11	சாலைகள் மறு சீரமைப்பு	4000.00	11	சாலைகள் மறு சீரமைப்பு	4000.00
12	தூய்மை இந்தியா திட்டம் (சுவஜ் பாரத் மிஷன்)	101.40	12	தூய்மை இந்தியா திட்டம் (சுவஜ் பாரத் மிஷன்)	101.40
13	பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி	34.90	13	பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி	34.90
14	மின் சேமிப்பு,மின் தணிக்கை (ESCO)	569.25	14	மின் சேமிப்பு,மின் தணிக்கை (ESCO)	569.25
15	தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம் (NULM)	159.44	15	தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம் (NULM)	159.44
16	தேசிய நகர்புற சுகாதார திட்டம் (NUHM)	352.00	16	தேசிய நகர்புற சுகாதார திட்டம் (NUHM)	352.00
17	வைப்பு தொகை	615.20	17	வைப்பு தொகை	438.10
18	நிதி மாற்றம்	2300.00	18	கடன்கள் திருப்பிச் செலுத்துதல்	2827.17
19	முதலீடுகள் திரும்ப பெறுதல்	3500.00			
	மொத்தம்	**20075.32**		**மொத்தம்**	**20075.32**
	ஆக மொத்த வரவினம்	**35772.91**		**ஆக மொத்த செலவினம்**	**35772.91**

சேலம் மாநகராட்சி
2016-2017 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம்
வருவாய் கணக்கு

வரவு இனங்கள்			செலவு இனங்கள்		
வ. எண்	விபரம்	ரூபாய் இலட்சத்தில்	வ. எண்	விபரம்	ரூபாய் இலட்சத்தில்
1.	சொத்து வரி	3170.50	1.	மொத்த நிர்வாகச் செலவு	9430.00
2.	தொழில் வரி	680.00	2.	பொது பணிகள்	2000.00
3.	கேளிக்கை வரி	350.00	3.	குடிநீர் பராமரிப்பு	3140.00
4.	முத்திரைத்தாள் கட்டணம்	850.00	4.	மின்கட்டணம்	1128.50
5.	சொத்துக்கள் மூலம் வரவு	1309.25	5.	தெருவிளக்கு பராமரிப்பு	200.00
6.	குடிநீர் விநியோக வரவு	2750.00	6.	பொது சுகாதாரம் மற்றும் மலேரியா	1155.00
7.	குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை	450.00	7.	நூலக வரி	250.00
8.	கட்டணங்கள் மூலம் வரவு	596.65	8.	வாகனங்கள் பராமரிப்பு	850.00
9.	அரசு நிதி உதவி மற்றும் மானியம்	9000.00	9.	கட்டிடங்கள் பராமரிப்பு	100.00
10.	குடும்ப நல நிதி	550.00	10.	கடன்கள் திருப்பி செலுத்துதல் (திருமணி முத்தாறு, தனிக்குடி நீர் திட்டம் பாதாளசாக்கடை திட்டம் மற்றும் சாலை சீரமைப்பு	2500.00
11.	பாதாள சாக்கடை இணைப்பு வைப்புத் தொகை	1000.00	11.	இதர செலவுகள்	250.80
12	இதர வரவுகள்	200.00			
	மொத்த வரவினம்	**20906.40**		**மொத்த செலவினம்**	**21004.30**

சேலம் மாநகராட்சி
2016-2017 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம்
மூலதனக் கணக்கு

வரவு இனங்கள்			செலவு இனங்கள்		
வ. எண்	விபரம்	ரூபாய் இலட்சத்தில்	வ. எண்	விபரம்	ரூபாய் இலட்சத்தில்
1.	தன்னிறைவுத் திட்டம் (SSS)	100.00	1.	தன்னிறைவுத் திட்டம் (SSS)	100.00
2.	உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி	391.00	2.	உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி	391.00
3.	குடிநீர் விநியோக பராமரிப்பு	4329.00	3.	குடிநீர் விநியோக பராமரிப்பு	5500.00
4.	தனிக்குடிநீர் திட்டம்	673.00	4.	தனிக்குடிநீர் திட்டம்	1392.00
5.	13 வது மற்றும் 14 வது நிதிக் குழு மானியம்	1400.00	5.	13 வது மற்றும் 14 வது நிதிக் குழு மானியம்	1400.00
6	ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM)	2000.00	6	ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM)	2000.00
7.	நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP)	2000.00	7.	நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP)	2000.00
8.	வறட்சி நிவாரணம்	200.00	8.	வறட்சி நிவாரணம்	200.00
9.	இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி	360.00	9.	இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி	360.00
10.	சிறப்பு சாலை திட்டம்	2702.00	10.	சிறப்பு சாலை திட்டம்	3447.00
11.	தூய்மை இந்தியா திட்டம் (சுவஜ் பாரத் மிஷன்)	126.40	11.	தூய்மை இந்தியா திட்டம் (சுவஜ் பாரத் மிஷன்)	126.40
12.	பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி	100.00	12.	பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி	100.00
13.	மின் சேமிப்பு மற்றும் மின் தணிக்கை (ESCO)	580.75	13.	மின் சேமிப்பு மற்றும் மின் தணிக்கை (ESCO)	580.75
14.	தேசிய நகர்புற சுகாதார பணி (NUHM)	300.00	14.	தேசிய நகர்புற சுகாதார பணி (NUHM)	300.00
15.	நகர் ஊரமைப்பு துறை மானியம்	138.00	15.	நகர் ஊரமைப்பு துறை மானியம்	138.00
16.	திடக்கழிவு மேலாண்மை (செட்டிசாவடி)	1758.00	16.	திடக்கழிவு மேலாண்மை (செட்டிசாவடி)	1758.00
17.	தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம் (NULM)	135.00	17.	தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம் (NULM)	135.00
18.	அம்ருத் திட்டம்	1185.02	18.	அம்ருத் திட்டம்	1185.02
19.	தமிழ்நாடு நகர மேம்பாட்டு நிதி நிறுவனம்கடன் (திருமணி முத்தாறு)	96.00	19.	தமிழ்நாடு நகர மேம்பாட்டு நிதி நிறுவனம்கடன் (திருமணி முத்தாறு)	96.00
20.	வைப்புத் தொகை	803.25	20.	வைப்புத் தொகை	255.00
21.	நிதி மாற்றம்	2500.00	21.	வட்டியில்லா கடன் திருப்பி செலுத்துதல் (பாதாள சாக்கடை திட்டம் மற்றும் தனிக்குடிநீர் திட்டம்)	3709.50
22.	முதலீடுகள் திரும்ப பெறுதல்	1500.00			
23.	பொது நிதி பங்குத் தொகை	1300.00			
	மொத்தம்	**24677.42**		**மொத்தம்**	**25173.67**
	ஆக மொத்த வரவினம்	**45583.82**		**ஆக மொத்த செலவினம்**	**46177.97**

பற்றாக்குறை - 594.15

சேலம் மாநகராட்சி
2015-2016 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம்
கல்வி நிதி

வரவு இனங்கள்			செலவு இனங்கள்		
வ. எண்	விபரம்	ரூபாய் இலட்சத்தில்	வ. எண்	விபரம்	ரூபாய் இலட்சத்தில்
1.	சொத்து வரியில் கல்வி வரி	385.80	1.	பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் கூடுதல் கட்டிடங்கள்	350.00
2.	வங்கிகள் மூலம் வட்டி	0.80	2.	பள்ளி வாடகை	0.75
3.	அரசு மானியம் (புதிய அங்கன் வாடி கட்டிடங்கள் கட்டுதல்)	66.75	3.	10 வது, 12 வது வகுப்பு இறுதித் தேர்வில் முதல் 25 இடம் பிடித்த மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பரிசு, நிதியுதவி வழங்க நிதி ஒதுக்கீடு	0.80
			4.	சிறுவர்கள் கழிப்பகம் (அங்கன்வாடி)	23.80
			5.	அரசு மானியம் (புதிய அங்கன் வாடி கட்டிடங்கள் பராமரிப்பு)	20.00
			6.	அரசு மானியம் (புதிய அங்கன் வாடி கட்டிடங்கள் கட்டுதல்)	56.70
			7	விளம்பர கட்டணம்	0.50
			8	இதர செலவுகள்	0.80
	மொத்தம்	**453.35**		**மொத்தம்**	**453.35**

சேலம் மாநகராட்சி
2016-2017 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம்
கல்வி நிதி

வரவு இனங்கள்			செலவு இனங்கள்		
வ. எண்	விபரம்	ரூபாய் இலட்சத்தில்	வ. எண்	விபரம்	ரூபாய் இலட்சத்தில்
1.	சொத்து வரியில் கல்வி வரி	495.10	1.	பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் கூடுதல் கட்டிடங்கள்	430.00
2.	வங்கிகள் மூலம் வட்டி	1.00	2.	பள்ளி வாடகை	2.00
3.	அரசு மானியம் (புதிய அங்கன் வாடி கட்டிடங்கள் கட்டுதல்)	132.30	3.	10 வது, 12 வது வகுப்பு இறுதித் தேர்வில் முதல் 25 இடம் பிடித்த மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பரிசு, நிதியுதவி வழங்க நிதி ஒதுக்கீடு	1.00
			4.	சிறுவர்கள் கழிப்பகம் (அங்கன்வாடி)	10.00
			5.	அரசு மானியம் (புதிய அங்கன் வாடி கட்டிடங்கள் பராமரிப்பு)	10.00
			6.	அரசு மானியம் (புதிய அங்கன் வாடி கட்டிடங்கள் கட்டுதல்)	174.30
			7	விளம்பர கட்டணம்	0.50
			8	இதர செலவுகள்	0.60
	மொத்தம்	**628.40**		**மொத்தம்**	**628.40**

சேலம் மாநகராட்சி

2015–2016 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத் திட்ட விவரங்கள்

வருவாய் கணக்கு

மொத்த வரவினம்	ரூ. 15697.59	இலட்சங்கள்
மொத்த செலவினம்	ரூ. 15697.59	இலட்சங்கள்

மூலதனக் கணக்கு

மொத்த வரவினம்	ரூ. 20075.32	இலட்சங்கள்
மொத்த செலவினம்	ரூ. 20075.32	இலட்சங்கள்
ஆக மொத்த வரவு	**ரூ. 35772.91**	**இலட்சங்கள்**
ஆக மொத்த செலவு	**ரூ. 35772.91**	**இலட்சங்கள்**

2015–2016 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பற்றாக்குறையான தொகை ரூ. 726.94 இலட்சங்களை மாநகராட்சியின் வருவாய் மற்றும் அரசு நிதியுதவிகள் மூலமாக சரி செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2016 – 2017 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட விவரங்கள்

வருவாய் கணக்கு

மொத்த வரவினம்	ரூ. 20906.40	இலட்சங்கள்
மொத்த செலவினம்	ரூ. 21004.30	இலட்சங்கள்

மூலதனக் கணக்கு

மொத்த வரவினம்	ரூ. 24677.42	இலட்சங்கள்
மொத்த செலவினம்	ரூ. 25173.67	இலட்சங்கள்
ஆக மொத்த வரவு	**ரூ. 45583.82**	**இலட்சங்கள்**
ஆக மொத்த செலவு	**ரூ. 46177.97**	**இலட்சங்கள்**
பற்றாக்குறை	**ரூ. 594.15**	**இலட்சங்கள்**

இந்த நிதி நிலை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பற்றாக்குறையை சேலம் மாநகராட்சியின் வருவாயை மேம்பாடு செய்தும், நிதி ஆதாரங்களை கூடுதலாகப் பெற்றும், பல்வேறு நடவடிக்கைகள் மூலமும் சரிசெய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது திட்டங்கள்

பொலிவுறு நகரம் (Smart City)

மத்திய அரசின் "பொலிவுறு நகரம்" (Smart City) திட்டத்தில் 100 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் தமிழ்நாடு அரசின் பரிந்துரையின் அடிப்படையில் 12 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டது. இந்த 12 நகரங்களில் ஒன்றாக "சேலம் மாநகரம்" தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் செயல்படுத்த ஏதுவாக மத்திய அரசு சில வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கியுள்ளது. இந்த வழிகாட்டு நெறிமுறைகளில் கீழ்கண்ட இரண்டு இனங்களின் கீழ் திட்டம் செயல்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. **பகுதி அடிப்படையில் அபிவிருத்தி செய்தல்**
   (Area Based Development)
   a) இருக்கும் நிலையினை மேம்படுத்துதல் (Retrofitting)
   b) மறு சீரமைப்பு (Redevelopment)
   c) பசுமை நகரம் (Green Field)

2. **பேன் சிட்டி (Pan City)**
   நகர் முழுவதும் குறைந்த பட்சம் இரண்டு வகையில் கணினி அடிப்படையில் திட்டம் செயல்படுத்துதல்.

இவ்விரு முக்கிய இனங்களிலும் உறுதியளிக்கப்பட்ட மின்சாரம், போதிய அளவு குடிநீர், திடக்கழிவு மேலாண்மை திட்டம், மழைநீர் சேகரிப்பு, அதிநவீன மீட்டர்கள் பொருத்துதல், அதிநவீன தகவல் தொடர்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்குதல், பாதசாரிகளுக்கான நடைபாதைகள், மோட்டார் வாகனம் அல்லாத போக்குவரத்தை ஊக்குவித்தல், திறன்மிகு நகர போக்குவரத்து மற்றும் பொது போக்குவரத்து, வாகனங்கள் இல்லா தெருக்கள்/பகுதிகள், பல்லடுக்கு வாகன நிறுத்தம், மின் சேமிப்பு தெரு விளக்குகள், திறந்த வெளிகளை பயனுடையதாக்குதல், பிரித்தறியும் வகையிலான மேம்படுத்தப்பட்ட பகுதி, பொதுமக்கள் பாதுகாப்புடன் வாழ வழிவகை செய்தல் குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் பாதுகாப்புடன் வாழ வழி வகை செய்தல் போன்ற அம்சங்களை உள்ளடக்கி "கொள்கை அளவில் திட்ட வரைவு" (Conceptual Plan) தயார் செய்ய அறிவுறுத்தப்பட்டது.

இத்திட்டத்தில் பொதுமக்களும் பங்கெடுக்கும் வகையில் பொதுமக்கள் மற்றும் பங்களிப்போர்(Stake Holders) கூட்டங்கள், மாணவர்களுக்கான பல்வேறு போட்டிகள், பொதுமக்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்து வாக்களிக்க ஏற்பாடு செய்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தினை செயல்படுத்த தேவையான நிதி ஆதாரம் மத்திய அரசின் பங்குத் தொகை (மானியமாக) ரூ.100.00 கோடி/வருடத்திற்கு, மாநில அரசின் பங்குத் தொகை (மானியமாக)ரூ.100.00 கோடி/வருடத்திற்கு மற்றும் பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பு ரூ. 1000.00 கோடி (5 ஆண்டிற்கு) ஒதுக்கீடு செய்யப்படும் என திட்ட வழிகாட்டுதலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருக்கும் நிலையினை மேம்படுத்துதல் (Retrofitting) தலைப்பின் கீழ் செயல்படுத்த உரிய பகுதியினை தெரிவு செய்திட, பொதுமக்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டதின் அடிப்படையில் அதிக வாக்குகள் பெற்றுள்ள பழைய பேருந்து நிலையம், வ.உ.சி. மார்க்கெட் பகுதி தேர்வு செய்யப்பட்டு, 690 ஏக்கரில் இத்திட்டம் செயல்படுத்தவும், மற்றும் இதர திட்டங்களை மேற்கொள்ளவும், மாநகர பொதுமக்களின் கருத்து வாக்கெடுப்பின் அடிப்படையில் ரூபாய் 1718.00 கோடி மதிப்பீட்டில் கொள்கை திட்ட அறிக்கை திருவாளர்கள் Infrastructre Development Corporation (Karnataka) Ltd., (IDEC Ltd) பெங்களூரு என்ற நிறுவனம் மூலம் தயார் செய்யப்பட்டு மாநில அரசு வாயிலாக மத்திய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 2016 ல் வெளியிடப்படும் பொலிவுறு நகரங்களின் 2 வது பட்டியலில் சேலம் மாநகரம் இடம்பெறத்தக்க வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், பொலிவுறு நகரம் (Smart City) திட்டத்தினை செயல்படுத்திட அரசின் வழிகாட்டுதலில், நிறுவன சட்டம் (Company Act) 2013 ன் கீழ், தமிழ்நாடு அரசு (பங்குத் தொகை 50 %) மற்றும் சேலம் மாநகராட்சி (பங்குத் தொகை 50 %) ஆகிய அமைப்புகளை பங்குதாரர்களாகக் கொண்ட ஒரு நிறுவனம் (Company) ஏற்படுத்தி, சிறப்பு பணி முகமை (Special Purpose Vehicle) மூலம் நகர அளவிலான அரசு துறைகளை உள்ளடக்கிய பணிக்குழு (City Level Inter Departmental Task Force), நகர அளவிலான பொலிவுறு நகரம் ஆலோசனை குழு (CITY LEVEL SMART CITY ADVISORY FORUM)ஆகியவற்றின் ஆலோசனைகளை பெற்று இயங்கும் வகையிலான அமைப்பு ஏற்படுத்தப்பட உள்ளது.

அம்ருத் திட்டம்

அம்ருத் திட்டத்தின் கீழ் எதிர் வரும் நிதியாண்டில் சேலம் மாநகராட்சி பகுதியில் நான்கு இடங்களில் பசுமை வெளி பூங்கா அமைக்க கீழ்கண்ட இடங்கள் தேர்வு செய்யப்பட்டு அதற்கான மதிப்பீடுகள் கீழ்கண்டுள்ளவாறு தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

வ.எண்	கோட்டம் எண்	பசுமை வெளி பூங்கா இடம்	மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்)
1.	3.	அசோக் நகர் பசுமை வெளி பூங்கா அமைத்தல், சூரமங்கலம் வார்டு அலுவலகம்	35.60
2.	5.	சோனா நகர் பசுமை வெளி பூங்கா அமைத்தல், அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம்	41.60
3.	9.	எஸ்.கே. டவுன் ஷிப் பகுதி, பசுமை வெளி பூங்கா அமைத்தல், அம்மாபேட்டை வார்டு அலுவலகம்	51.26
4.	60	சீலநாயக்கன்பட்டி காஞ்சி நகர் பகுதி, பசுமை வெளி பூங்கா அமைத்தல், கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம்	65.00
		மொத்த மதிப்பீடு தொகை	193.46

மழைநீர் வடிகால்

அம்ருத் திட்டத்தின் கீழ், சேலம் மாநகராட்சி பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தொகை ரூ.991.56 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தூய்மை இந்தியா திட்டம் (சுவஜ் பாரத் மிஷன்) : சமுதாய கழிப்பிடம்

2014–2015 மற்றும் 2015–2016ம் நிதி ஆண்டில் சேலம் மாநகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் (Swatch Bharath Mission) நிதியின் கீழ் 31 எண்ணிக்கையில் சமுதாயக் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு ரூ.101.40 இலட்சமும், 2015–2016ம் ஆண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் (Operation & Maintenance Gap Filling Fund) ரூ.360.00 இலட்சமும் மீதமுள்ள தொகை ரூ. 165.90 இலட்சம் நன்கொடையாளர் / பொது

மக்கள் பங்கு தொகையுடன் சேர்த்து மொத்த மதிப்பீடு தொகை ரூ.627.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்து பணிகளுக்கும் 19.10.2015ம் தேதியில் பணி உத்திரவு வழங்கப்பட்டு 3 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 27 பணிகள் விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

திடக்கழிவு மேலாண்மை திட்டம்

சேலம் மாநகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை (நாளொன்றுக்கு சுமார் 350 டன்) அகற்றம் செய்திட ஏதுவாக, முதல் நிலை சேகரம், இரண்டாம் நிலை சேகரம் மற்றும் செட்டிச்சாவடி திடக்கழிவு வளாகத்தில் திடக்கழிவுகளை பதப்படுத்துதல், உரமாக்குதல் மற்றும் அழித்தல் பணிகளை மேற்கொள்ள தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற பணிகளுக்கான திட்ட மதிப்பீடு ரூ. 1758.00 இலட்சங்களில் சமர்ப்பிக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியாக (55%) ரூ. 966.90 இலட்சமும் மாநகராட்சி பங்களிப்பாக (25%) ரூ. 439.50 இலட்சமும் தூய்மை இந்தியா திட்ட நிதியில் (20%)ரூ. 351.60 இலட்சமும் ஒதுக்கீடு செய்வதாக தூய்மை இந்தியா திட்டத்தின் மாநில உயர் அதிகார குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதில் ரூ.119.00 இலட்சங்களில் 4 தொட்டிகளுடன் கூடிய தள்ளுவண்டிகள் 497 எண்ணிக்கைகளும், ரூ.214.00 இலட்சங்களில் காம்பாக்டர் பின் 534 எண்ணிக்கைகளும், ரூ.136.00 இலட்சங்களில் காம்பாக்டர் வாகனம் 4 எண்ணிக்கைகள் வாங்கிடவும் , ரூ.70.00 இலட்சங்களில் செட்டிச்சாவடியில் வள மீட்பு மையம்–உலர்–40 மெட்ரிக் டன், பிரிக்கும் மேடை, உலர் கழுவி, பேலர் மற்றும் பிளாஸ்டிக் பல்வரைஸ் அமைக்கும் பணி, ரூ.85.00 இலட்சங்களில் செட்டிச்சாவடியில் காய்கறி மார்க்கெட் கழிவுகளுக்கான பரவலாக்கப்பட்ட உரத்தயாரிப்பு முற்றம் (40 மெட்ரிக் டன்), மற்றும் இயந்திரங்களுடன் கூடிய தளம் அமைக்கும் பணி, ரூ.200.00 இலட்சங்களில் செட்டிச்சாவடியில் திடக்கழிவு கசிவு நீர் சேகரிப்பு அமைப்பு மற்றும் உரத் தளத்துடன் கூடிய திடக்கழிவு பதன ஆலை அமைக்கும் பணி , ரூ.135.00 இலட்சங்களில் செட்டிச்சாவடியில் உரத்தளத்தின் 3 ல் 1 பகுதியில் மேற்கூரை அமைக்கும் பணி, ரூ.400.00 இலட்சங்களில் செட்டிச்சாவடியில் முன் பதப்படுத்துதல் மற்றும் சுத்திகரித்தல் மேற்கொள்ள தேவையான இயந்திரங்கள் (250 மெட்ரிக் டன்) அமைக்கும் பணி , ரூ.60.00 இலட்சங்களில் முன் தரம் பிரித்தலுக்கான கூடம் அமைக்கும் பணி, ரூ.80.00 இலட்சங்களில் செட்டிச்சாவடி திடக்கழிவு வளாகத்தை சுற்றிலும் முள்கம்பி வேலி மற்றும் விளக்கு வசதிகளுடன் கூடிய சுற்றுச்சுவர் அமைக்கும் பணி , ரூ.10.00 இலட்சங்களில் நீர் விநியோகத்திற்கான ஏற்பாடுகள் செய்தல், ரூ.20.00 இலட்சங்களில் 20மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட

எடை மேடை அமைக்கும் பணி, ரூ.15.00 இலட்சங்களில் பணியாளர்கள் தங்குமிடம் அமைத்தல், ரூ.214.00 இலட்சங்களில் சுகாதாரமான முறையில் திடக்கழிவுகளை நிரப்பி மூடும் பணிக்கான குழிகள் அமைத்தல் முதலான பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

பனமரத்துபட்டி ஏரியை மேம்படுத்துதல் மற்றும் நீர்ஆதாரத்தினை மையமாக கொண்டு சுற்றுலா தலம் அமைத்தல்

சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான பனமரத்துபட்டி ஏரியின் நீர்பிடிப்பு பகுதிக்குள் நீர் ஆதாரம் பெருக்கிட தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கட்டுமானங்கள் ஏற்படுத்தவும், ஏரியின் நீர் ஆதாரத்தினை மையமாக கொண்டு சுற்றுலாதலம் அமைத்திடவும் ரூ 2,800 இலட்சங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில்

1	ஒருங்கிணைந்த நிலம் மற்றும் நீர் மேலாண்மை (Integrated Land & Water Management)	ரூ. 993.67 இலட்சங்கள்
2	பல்லுயிர் பாதுகாப்பு (Bio-Diversity Conservation)	ரூ. 143.00 இலட்சங்கள்
3	சுற்றுச் சூழல் சுற்றுலா மேம்பாடு (Eco-Tourism Development)	ரூ. 1,435.49 இலட்சங்கள்
4	நிறுவன மேம்பாடு (Institutional Development)	ரூ. 197. 84 இலட்சங்கள்
5	மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு செயல் அமைவு திட்டம் ஏற்படுத்துதல் (Monitoring and Evaluation Mechanism)	ரூ. 30. 00 இலட்சங்கள்
	மொத்தம்	ரூ. 2,800. 00 இலட்சங்கள்

என மதிப்பிடப்பட்டு இத்திட்ட அறிக்கை தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம், சென்னை அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

பனமரத்துப்பட்டி ஏரி சீரமைத்தல்

சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான பனமரத்துப்பட்டி ஏரிப் பகுதியில் உள்ள பயனற்ற கருவேல முள் மரங்களை வெட்டி அப்புறப்படுத்தும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.461.60 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

சேலம் மாநகராட்சி புதிய மைய அலுவலக கட்டிடம்

சேலம் மாநகராட்சி அலுவலகம் நாவலர் நெடுஞ்செழியன் சாலையில் உள்ள பழைய கட்டிடத்தில் இயங்கி வந்தது. மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பிறகு மேற்படி கட்டிடம் போதுமான இடவசதி இன்றி இருந்தது. எனவே பழைய அலுவலக கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தி விட்டு, அதே இடத்தில் 2012–2013 ஆம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் புதிய மைய அலுவலகத்திற்காக, தரைதளம் மற்றும் முதல் தளம் ஆகியவற்றிற்கு கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

மேலும் கூடுதலாக இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் ஆகியவைகளை கட்டுவதற்கு 2015–2016ஆம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ.5.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 22.01.2016ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

புதிய கட்டுமானப் பணிகள்

2014–2015ம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு புதிய அலுவலக கட்டிடப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, அரசு மானியம் ரூ.300.00 இலட்சமும், மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.16.00 இலட்சமும் சேர்த்து மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.316.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 02.09.2015ம் தேதி பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

2014–2015ம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் தனிக்குடிநீர் திட்டத்தில், கோம்புரான்காடு நீர்உந்து நிலையத்தில் உள்ள மின் மோட்டார்களுக்கு புதியதாக வி.எப்.டி (Variable Frequency Device) அமைக்கும் பணிக்கு அரசு மானியமாக ரூ.480.00 இலட்சமும் மாநகராட்சியின் பொது நிதியின் கீழ் ரூ.20.00 இலட்சமும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.500.00 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மகப்பேறு மருத்துவமனைகள்

2014–2015ம் ஆண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ.120.00 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.36ல் கனகசபாபதி தெருவில் உள்ள பழைய மகப்பேறு மருத்துவமனையினை இடித்து அப்புறப்படுத்தி, புதியதாக மகப்பேறு மருத்துவமனை கட்டும் பணியும், கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.50ல் மணியனூார் சந்தை பகுதியில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகில் புதிய மகப்பேறு மருத்துவமனை கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் மார்ச் 2016க்குள் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

தேசிய நகர்புற சுகாதார திட்டம் (NUHM)

2013–2014 & 2014–2015 ஆம் ஆண்டு தேசிய நகர்புற சுகாதார திட்டத்தின் கீழ், சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான அஸ்தம்பட்டி UHP, பொன்னம்மாபேட்டை UHP, அம்மாபேட்டை UHP, தாதகாபட்டி UHP, குகை MCH, நியூ பள்ளப்பட்டி ஆகிய மருத்துவமனைகளுக்கு புதிய கட்டிடங்கள் கட்டும் பணியினை மேற்கொள்ள, 29.06.2015ம் தேதியில் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

மேற்படி திட்டத்தின் மூலம் ஏற்கனவே உள்ள அரிசிப்பாளையம் UHP, கிச்சிப்பாளையம் UHP, செவ்வாய்ப்பேட்டை UHP, சுப்ரமணியநகர் MCH, கருங்கல்பட்டி MCH, அண்ணா மருத்துவமனை மருந்தகம், என்.ஜி.ஜி.ஓ. காலனி, ரெட்டியூர், பழைய சூரமங்கலம் மருந்தகம், அன்னதானப்பட்டி MCH ஆகிய 10 ஆரம்ப சுகாதார மருத்துவமனை கட்டிடங்களுக்கும் தலா ரூ.10.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.100.00 இலட்சத்தில் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

குடிநீர் விநியோகம்

சேலம் மாநகராட்சியில் உள்ள 60 கோட்டங்களுக்கும் தனிக்குடிநீர் திட்டம் மூலம் 102 எம்.எல்.டி. குடிநீரும், மேட்டூர் நங்கவள்ளி குடிநீர் திட்டத்தின் மூலம் 10 எம்.எல்.டி. குடிநீரும் ஆக மொத்தம் தினசரி 112 எம்.எல்.டி. குடிநீர் பெறப்பட்டு, 2 முதல் 4 நாட்கள் இடைவெளியில் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 135 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நாளது தேதி வரை 98,150 எண்ணிக்கை வீட்டுக் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது .

மேலும் மாநகர பகுதியில் உள்ள 3,041 எண்ணிக்கை ஆழ்துளைக்கிணறுகளில் 964 எண்ணிக்கை கை பம்புகளும், 2,077 எண்ணிக்கை விசைபம்புகளும் பொருத்தப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. இதன் மூலம் தினந்தோறும் 2.64 எம்.எல்.டி. தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தெரு விளக்கு

சேலம் மாநகராட்சிப் பகுதியில் மொத்தம் 28,690 தெருவிளக்குகள் கீழ்கண்டுள்ளவாறு பராமரிக்கப்படுகிறது.

1.	குழல் விளக்குகள் (தெருவிளக்குகள் –17,470 மற்றும் அலுவலகத்தில் உள்ளவை –1,046)	:	18,516	எண்ணிக்கைகள்
2.	சோடியம் ஆவி விளக்குகள்	:	8,004	எண்ணிக்கைகள்
3.	பாதரச ஆவி விளக்குகள்	:	104	எண்ணிக்கைகள்

4.	T5 விளக்குகள்	:	1,620	எண்ணிக்கைகள்
5.	உயர் கோபுர மின் விளக்குகள்	:	302	எண்ணிக்கைகள்
6.	90 வாட்ஸ் எல்.இ.டி. விளக்குகள்	:	102	எண்ணிக்கைகள்
7	300 வாட்ஸ் இன்டெக்ஸ் விளக்குகள்	:	8	எண்ணிக்கைகள்
8.	250 வாட்ஸ். எம்.எச். விளக்குகள்	:	34	எண்ணிக்கைகள்
	மொத்தம்	:	28,690	எண்ணிக்கைகள்

தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகள் அரசு ஆணையின்படி, மின் சேமிப்பு மற்றும் மின் தணிக்கை அடிப்படையில் தனியார் நிறுவனமான திருவாளர்கள் ஆகாஷ் அசோசியேட்ஸ் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.இந்நிறுவனம் 10 ஆண்டுகள் வரை அனைத்து பராமரிப்பு பணிகளையும் மேற்கொள்ள உள்ளது. இத்திட்டத்தில் மின்சாரம் சேமிக்கின்ற வகையில் மொத்தம் 17,470 எண்ணிக்கையில் உள்ள 4 அடி குழல் விளக்குகளை, நாளது தேதி வரை 11,975 எண்ணிக்கை குழல் விளக்குகள் 20 watts LED விளக்குகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மீதம் உள்ள விளக்குகள் மார்ச் 2016க்குள் மாற்றம் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளது.

மேலும் இத்திட்டத்தில் 2016–17ம் ஆண்டில் மாநகரில் 2,275 எண்ணிக்கையில் புதிய 20 வாட்ஸ் LED விளக்குகள் அமைக்கப்பட உள்ளது.

சாலைகள்

சேலம் மாநகராட்சியில் 758.85 கி.மீ. நீள தார்சாலை, 12.80 கி.மீ. ஜல்லி சாலை, 57.78 கி.மீ. சிமெண்ட் சாலை மற்றும் 19.20 கி.மீ. மண்சாலைகள் என மொத்தம் 848.63 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.தொகை ரூ.25.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 25.02.2016ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மாநகரில் தனிக்குடிநீர் திட்டம், பாதாளசாக்கடைத் திட்டம், மின்சார வாரியத்தின் மூலம் கேபிள் பதிக்கும் திட்டம் ஆகிய திட்டங்களால், சாலைகள் பழுதுதடைந்துள்ளன. அறிக்கையாண்டில் பொது நிதியின் கீழ் 40 பணிகள் 6.33 கி.மீ. நீளத்திற்கு ரூ.100.70 இலட்சம் மதிப்பீட்டில் பழுதடைந்த சாலைகளை சீரமைத்து பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் (TURIP)

சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்ட பகுதியில் பழுதடைந்த சாலைகளை சீரமைத்திட, தமிழ்நாடு நகர்புற சாலைகள்

அபிவிருத்தி திட்டம் 2014–2015ன் கீழ் ரூ.1,122.00 இலட்சங்கள் அரசிடமிருந்து மானியமாக பெறப்பட்டு, 52 பணிகள் 18.127 கி.மீ. நீளத்திற்கு ரூ.1,269.95 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது.

சிறப்பு சாலை திட்டம் 2015–2016 (SRP) :

சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்ட பகுதியில் பழுதடைந்த சாலைகளை சீரமைத்திட சிறப்பு சாலை திட்டம் 2015–2016கீழ், 50 பணிகளுக்கு 29.767 கி.மீ. நீளத்திற்கு மதிப்பீடு தொகை ரூ.2500.00 இலட்சத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் அரசு மானியம் ரூ.450.00 இலட்சங்கள், கடன் தொகை ரூ. 1,350.00 இலட்சங்கள் மற்றும் மாநகராட்சி பங்குத் தொகை ரூ.700.00 இலட்சங்கள் என்ற நிதி ஆதாரத்தின் அடிப்படையில் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள 16.10.2015ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 09.11.2015ம் தேதியில் பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

TUFIDCO நிதியுதவி மூலம் சாலைகள் அமைக்கும் திட்டம்

சேலம் மாநகராட்சி பகுதியில், 2015–2016ம் நிதியாண்டில் பாதாள சாக்கடைத் திட்டம், தனிக்குடிநீர் திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் பகுதியில் சேதமடைந்த 122.005 கிலோ மீட்டர் சாலைகளை மறுசீரமைப்பு செய்யும் பொருட்டு TUFIDCO மூலம் கடன் தொகையாக ரூ. 6,702.00 இலட்சத்திலும், மாநகராட்சி பங்கு தொகையாக ரூ.745.00 இலட்சத்திலும் சேர்த்து மொத்த மதிப்பீடு தொகை ரூ.7,447.00 இலட்சத்திலும் 293 சாலைப் பணிகளை 41 சிப்பங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் மேற்கொள்ள ஏதுவாக 22.02.2016ம் தேதியில் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

போடிநாயக்கன்பட்டி ரயில்வே பாலம்

2015–2016ம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ், சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.20ல் உள்ள போடிநாயக்கன்பட்டி பகுதியில் ரயில்வே பாலம் அமைக்கும் பணிக்கு, 2015–2016ம் ஆண்டிற்கான உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் அரசு மானியமாக ரூ.200.00 இலட்சமும் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.50.00 இலட்சமும் சேர்த்து, மதிப்பீடு தொகை ரூ.250.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு ரயில்வே துறையினரால் தயார் செய்து வழங்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.283.00 இலட்சத்திற்கு, திட்ட நிதி ரூ.200.00 இலட்சம் போக மீதமுள்ள தொகை ரூ.83.00 இலட்சத்தில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்ட நிதி 2014–2015–ன் கீழ் ரூ.30.00 இலட்சம் சேலம்

பாராளுமன்ற உறுப்பினர் திரு.வி.பன்னீர்செல்வம் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.53.00 இலட்சத்தினை இதர பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்தோ, சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்தோ, அரசின் இதர நிதி உதவி பெற்றோ அல்லது மாநகராட்சி பொது நிதியில் இருந்தோ ஈடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி திட்டம் (IUDM):

2013–2014ம் ஆண்டில், இத்திட்டதின் கீழ் வீராணம் திடக்கழிவு கிடங்கில் உணவுக்கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரித்திட உயிரி எரிவாயு கூடம் (Bio Methanation Plant) ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளது.

எரிவாயு தகனமேடை

சேலம் மாநகராட்சிக்கு, 2012–2013 ஆம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ், சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.28ல் உள்ள செவ்வாய்ப்பேட்டை இடுகாட்டில் புதியதாக எரிவாயு தகனமேடை அமைக்கும் பணிக்கு, அரசு மானியமாக ரூ.50.00 இலட்சமும், மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.80.00 இலட்சமும் சேர்த்து மொத்த மதிப்பீடு தொகை ரூ.130.00 இலட்சத்தில் பணிகள் அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளது. விரைவில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது.

2013–2014ம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ், அம்மாப்பேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.44–ல் எருமாப்பாளையம் குப்பை மேடு அருகில் உள்ள மயானத்திற்கு அரசு மானியமாக ரூ.100.00 இலட்சமும், மாநகராட்சியின் பொது நிதியின் கீழ் ரூ.50.00 இலட்சமும் சேர்த்து, மொத்த மதிப்பீடு தொகை ரூ.150.00 இலட்சத்தில் புதிய நவீன எரிவாயு தகனமேடை அமைப்பதற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் வரும் நிதியாண்டில் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

2013–2014ம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ், சூரமங்கலம் வார்டு அலுவலகம் அரியாகவுண்டம்பட்டி சாலை சந்திப்பில் இருந்து சேலத்தாம்பட்டி சாலை சந்திப்பு வரை ஏற்கனவே உள்ள மெயின் குடிநீர் குழாயினை அகற்றி 14” ஏசி 400 எம்.எம் விட்டம் அளவு கொண்ட புதியதாக குழாய் பதிக்கும் பணிக்கு, மதிப்பீடு தொகை ரூ.376.00 இலட்சத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு தொடர்ந்து பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணி முடியும் தருவாயில் உள்ளது.

2015–2016ம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ், சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.18ல் உள்ள மெய்யனூர் பகுதி மயானத்தில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணிக்கு அரசு மானியமாக ரூ.135.00 இலட்சமும், மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.33.00 இலட்சமும் சேர்த்து மதிப்பீடு தொகை ரூ.168.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 23.02.2016ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

உயிரி சுருக்க எரிவாயு தயாரித்தல் (Bio - Digester)

2015–2016ம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ், அம்மாப்பேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்–44 எருமாப்பாளையம் மெயின் ரோட்டில் உள்ள பொது கழிப்பிடத்திலிருந்து எரிவாயு தயாரிக்கும் பணிக்கு அரசு மானியமாக ரூ.20.00 இலட்சமும், மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.5.00 இலட்சமும் சேர்த்து மதிப்பீடு தொகை ரூ.25.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 25.02.2016ல் பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

மயானம் மேம்பாடு செய்தல்

சேலம் மாநகராட்சியில் 63 எண்ணிக்கையிலான மயானங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதில் எருமாப்பாளையம் மற்றும் கொண்டலாம்பட்டி ஆகிய இரண்டு மயானங்களை மேம்படுத்த 2014–2015ம் ஆண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதியின் கீழ் அரசு மானியம் தலா ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளது.

மட்கும் கழிவுகளில் இருந்து எரிவாயு தயார் செய்தல்

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.28 செவ்வாய்ப்பேட்டை மயானத்தில் எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கு தேவையான எரிவாயுவினை, மட்கும் கழிவுகளிலிருந்து தயாரிக்கும் உயிரி எரிவாயு கூடம் (Bio Methanation Plant) கட்டும் பணிக்கு 2015–2016ம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ.36.00 இலட்சமும், மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.9.00 இலட்சமும் சேர்த்து மதிப்பீடு தொகை ரூ.45.00 இலட்சத்திற்கு தொழில் நுட்ப அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திறந்தவெளியில் மனித கழிவு கழிக்கும் நிலையினை ஒழிக்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 2013–2014ஆம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியில், முதற்கட்டமாக அரசு மானியம் மதிப்பீடு தொகை ரூ.45.00 இலட்சமும், மாநில நிதி மதிப்பீடு தொகை ரூ.35.40 இலட்சமும் சேர்த்து மதிப்பீடு தொகை ரூ.80.40 இலட்சத்தில், சேலம் மாநகராட்சி பகுதியில் 4 இடங்களில் நவீன கழிப்பிடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இதனை தொடர்ந்து இரண்டாம் கட்டமாக உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியில் அரசு மானியம் மதிப்பீடு தொகை ரூ.45.00 இலட்சமும், மாநில நிதி மதிப்பீடு தொகை ரூ.35.00 இலட்சமும் சேர்த்து மதிப்பீடு தொகை ரூ.80.00 இலட்சத்தில், சேலம் மாநகராட்சி பகுதியில் 4 இடங்களில் நவீன கழிப்பிடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

2014–2015–ம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ், சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.22 சிவதாபுரம் பகுதியில், புதிய கழிப்பிடம் கட்டும் பணிக்கு, அரசு மானியம் ரூ.20.00 இலட்சமும், மாநகராட்சி பொது நிதி ரூ.8.50 இலட்சமும் சேர்த்து மொத்த மதிப்பீடு தொகை ரூ.28.50 இலட்சத்தில் பணி முடிக்கப்பட்டது.

2014–2015ம் ஆண்டு பொது நிதியின் கீழ், நான்கு வார்டு அலுவலகங்களில் ஏற்கனவே உள்ள 72 எண்ணிக்கையில் பழுதடைந்த கழிப்பிடங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வரும் நிலையில், ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி திட்டத்தின் (IUDM) கீழ் மராமத்து பணி மேற்கொள்ள, அரசு மானியம் ரூ.100.00 இலட்சத்தில் 54 எண்ணிக்கையிலான பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 25 பணிகள் முடிக்கப்பட்டது. மீதமுள்ள 29 பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.60 கோவிந்தம்மாள் நகர் பகுதியில் பூங்கா அமைக்க 2013–2014ம் ஆண்டு நகர் ஊரமைப்பு துறையின் திட்ட நிதியில் மதிப்பீடு தொகை ரு.16.50 இலட்சத்தில் 09.10.2015ம் தேதியில் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளது.

நவீன மீன் விற்பனை அங்காடி அமைத்தல்

சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.19 தர்மநகர் பகுதியில் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய மீன் வளர்ச்சி கழகம், ஹைதராபாத் அமைப்பின் மூலம் 90 சதவீதம் மானியத்துடன் புதிய நவீன மீன் விற்பனை நிலையம் கட்டும் பணி முடிக்கப்பட்டு 28.12.2015ம் தேதி திறந்து வைக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

தன்னிறைவுத் திட்டம்

சேலம் மாநகராட்சி பகுதியில் 2014–2015ம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், பொது மக்களின் பங்களிப்பு தொகை மூன்றில் ஒரு பங்கு (1/3) மற்றும் அரசின் பங்களிப்பு மூன்றில் இரண்டு பங்கு (2/3) என்ற விகிதத்தின் அடிப்படையில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 3 பணிகளுக்கு மொத்த மதிப்பீடு தொகை ரூ.56.90 இலட்சம் மதிப்பீட்டில் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டது.

சேலம் மாநகராட்சி பகுதியில் 2015–2016ம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், பொது மக்களின் பங்களிப்பு தொகை மூன்றில் ஒரு பங்கு (1/3) மற்றும் அரசின் பங்களிப்பு மூன்றில் இரண்டு பங்கு (2/3) என்ற விகிதத்தின் அடிப்படையில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 3 பணிகளுக்கு மொத்த மதிப்பீடு தொகை ரூ.55.10 இலட்சம் மதிப்பீட்டில் தொகுதி மேம்பாட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி

2015–2016ல் இத்திட்டத்தின்கீழ் சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.1 மாமாங்கம் ஊத்து கிணறு ஓடை கிழக்கு பகுதி குறுக்குத் தெருவில் சாலை தடுப்பு சுவர் மற்றும் கால்வாய் அமைத்து தார் சாலை வசதி செய்து தரும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ. 34.90 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 19.08.2015ம் தேதி பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டது.

மழைநீர் சேகரிப்புத் திட்டம்

சேலம் மாநகராட்சி பகுதியில் உள்ள 1,92,595 எண்ணிக்கையிலான வரி விதிப்புகளில் 1,66,150 எண்ணிக்கையிலான வீடுகளுக்கு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது. அதே போல் 681 எண்ணிக்கை அரசு அலுவலகங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது. மீதம் உள்ள 25,765 எண்ணிக்கையிலான வீடுகளுக்கும் மழைநீர் சேகரிப்பு செயல்படுத்த பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விழிப்புணர்வு செய்யப்பட்டு வருகிறது.

பொது நிதி

2015–2016ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.339.98 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 40 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 21 பணிகள் முடிக்கப்பட்டது. 6 பணிகளுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 13 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில் உள்ளது.

பாலூட்டும் தாய்மார்கள் அறை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் திட்டங்களில் ஒன்றான ‘‘பாலூட்டும் தாய்மார்கள் அறை ’’ பேருந்து நிலையங்களில் அமைக்க தெரிவித்ததின் அடிப்படையில், அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.32ல் பழைய பேருந்து நிலைய வளாகம், சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண். 24ல் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். மத்திய பேருந்து நிலையம் ஆகிய இரண்டு பேருந்து நிலையங்களிலும் காத்திருக்கும் அறை, பாலூட்டும் அறை, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, மின் விசிறி மற்றும் கழிப்பிடம் ஆகிய அனைத்து வசதிகளுடன் கூடிய ‘‘பாலூட்டும் தாய்மார்கள் அறை’’ மதிப்பீடு தொகை ரூ.18.40 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

கல்வி நிதி

2011–2012ம் ஆண்டு கல்வி நிதியின் கீழ், கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.50 மணியனூர் பகுதியில் ரூ.246.30 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பள்ளி கட்டிடம் கட்டும் பணி முடிக்கப்பட்டு, 28.12.2015ம் தேதி திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

2014–2015ஆம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் ரூ.229.45 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 16 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 10 பணிகள் முடிக்கப்பட்டது. மீதமுள்ள 6 பணிகளுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

2015–2016ஆம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் ரூ.99.00 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 4 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 2 பணிகளுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 2 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

குடிநீர் நிதி

2014–2015ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி குடிநீர் நிதியின் கீழ் ரூ.125.39 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 24 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டது.

2015–2016ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி குடிநீர் நிதியின் கீழ் ரூ.129.99 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 20 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 7 பணிகள் முடிக்கப்பட்டது. 8பணிகளுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. 5 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

வாகனங்கள்

2015–2016ம் ஆண்டு பொது நிதியின் கீழ் அலுவலக பயன்பாட்டிற்காக மாண்புமிகு மேயர் அவர்களுக்கு புதிய இனோவா வாகனம் ரூ. 14.50 இலட்சத்திலும் மற்றும் மரியாதைக்குரிய துணை மேயர் அவர்களுக்கு புதிய ஸ்கார்ப்பியோ வாகனம் ரூ.12.00 இலட்சத்திலும் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

அம்மா மக்கள் சேவை மையம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் ‘‘அம்மா மக்கள் சேவை மையம்’’ அமைக்க அறிவிப்பு வெளியிட்டதினை தொடர்ந்து, 2014–2015ம் ஆண்டு பொது நிதியின் கீழ் சூரமங்கலம் மண்டலத்தில் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் முதல் மாடி கட்டிடமும், அஸ்தம்பட்டி மண்டல அலுவலகத்தில் ரூ.19.90 இலட்சம் மதிப்பீட்டில் புதிய

கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. அம்மாப்பேட்டை மண்டல அலுவலகத்திற்கு மதிப்பீடு தொகை ரூ.25.00 இலட்சத்தில் புதிய கட்டிடம் கட்டும் பணி நடவடிக்கையில் உள்ளது. கொண்டலாம்பட்டி மண்டலத்தில் ஏற்கனவே உள்ள கட்டிடத்தில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்றப் பேரவையில் மாநகராட்சிகளில் உள்ள மண்டல அலுவலகங்களிலும், நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், பிறப்பு இறப்பு சான்றிதழ், வர்த்தக உரிமம், பாதாள சாக்கடை குழாய் இணைப்பு, குடிநீர் குழாய் இணைப்பு, தொழில் வரி விதிப்பு, சொத்து வரி கேட்பு, கட்டிட அனுமதி, பெயர் மாற்றம், காலிமனை வரி விதிப்பு, வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு சான்றிதழ் ஆகியவை கோரும் விண்ணப்பங்களின் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கும் வகையில் " அம்மா மக்கள் சேவை மையம் " நடத்தப்படும் என அறிவித்துள்ளார்கள்.

அதன்படி "அம்மா மக்கள் சேவை மையம்" 29.01.2016–ம் தேதி முதல் இம்மாநகராட்சியில் உள்ள நான்கு வார்டு அலுவலகங்களிலும் துவக்கப்பட்டு பிரதிவாரம் புதன் கிழமை தோறும் அம்மா மக்கள் சேவை மையத்தில், சேவை மற்றும் குறைபாடுகள் குறித்து பொது மக்களிடம் கேட்டறியப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. புதிய குடிநீர் இணைப்பு வழங்குதல், குழாய் நீர் கசிவு சம்பந்தமான புகார்கள், லாரி மூலம் குடிநீர் வழங்குதல், பாதாள சாக்கடை இணைப்பு வழங்குதல், கழிவு நீர் குழாய்கள் அடைப்பு, பொது கழிப்பிடங்கள் அடைப்புகள் குறித்த புகார், வணிகர்களுக்கான உரிமம் புதுப்பிக்க, சொத்து வரிகளில் பெயர் மாற்றம் குறித்த விண்ணப்பங்கள் – வரி விதிப்பு, பிறப்பு – இறப்பு பதிவு செய்தல் மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல், கட்டிட வரைபடங்கள், விண்ணப்பங்கள் அங்கீகரிக்க, கட்டிட உரிமைகள் வழங்குதல், புதிய மனை பிரிவுகளை அங்கீகரித்தல், வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்துதல் தொடர்பான தனிநபர் கடன் – குழுக்கடன் வழங்குதல், தொழிற் பயிற்சி வழங்குதல், சிக்கன நாணய சங்க அமைப்பிற்கு சுழல் நிதி வழங்குதல் போன்ற பணிகள் " அம்மா மக்கள் சேவை மையம் " மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அங்கன்வாடி மையம்

2012–2013ம் ஆண்டு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் இயங்கும் 26 அங்கன்வாடி மையங்களுக்கு, தலா ரூ.42,000.00 வீதம் சிறு பழுது பணிகள், 26 அங்கன்வாடி மையங்களுக்கு தலா ரூ.20,000.00 வீதம் குழந்தைகளுக்கான கழிப்பிடம் மற்றும் 3 அங்கன்வாடி மையங்களில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணிக்கு அரசு மான்யமாக தொகை ரூ.19.12 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 25.09.2015ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது,

2014–2015ம் ஆண்டு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் மறு சீரமைப்பு முறையில் சேலம் மாநகராட்சி பகுதியில் 21 புதிய அங்கன்வாடி மையக் கட்டிடம் கட்டும் பணிக்கு தலா ரூ.4.50 இலட்சமும், மாநகராட்சி பொது நிதியின் கீழ் தலா ரூ.2.00 இலட்சமும் சேர்த்து ஒவ்வொரு பணிக்கும் தலா ரூ.6.50 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 16.09.2015ம் தேதி பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. 5 பணிகள் முடிக்கப்பட்டது. மீதமுள்ள 16 பணிகள் நடைபெற்று வருகிறது.

சத்துணவு மையங்கள்

சேலம் மாநகராட்சி பள்ளிகளில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் உள்ள 35 பள்ளிகளில் சத்துணவு உண்ணும் மையங்கள் மற்றும் 3 தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட மையங்களையும் சேர்த்து மொத்தம் 38 மையங்களுக்கு சமையலறையினை நவீன படுத்தும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக ஒரு மையத்திற்கு தலா ரூ.22,350/–வீதம் 38 மையங்களுக்கு ரூ.8,49,300/– 2014–2015–ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து, 25.09.2015ம் தேதி பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம்

2014–2015ம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் வீடற்றோர்களுக்கான இரவு நேர தங்கும் இடம், சமையலறை, குளியலறை மற்றும் இதர வசதிகளுடன் கட்டிடம் கட்டும் பணியினை மேற்கொள்ள சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.28 சந்தைப்பேட்டை பகுதியில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக தங்குவதற்கும், அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.16 மார்க்கபந்து சாலை, அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.44 எருமாப்பாளையம் மெயின் ரோடு வாட்டர் டேங், மற்றும் கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.48 அன்னதானப்பட்டி மாநகராட்சி துவக்கப்பள்ளி வளாகம் ஆகிய பகுதிகளில் இருபாலரும் தங்க ஏதுவாக மொத்தம் 5 இடங்களில் தலா ரூ.25.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.125.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 29.12.2015ம் தேதியில் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

2014–2015ம் ஆண்டு இத்திட்ட நிதியின் கீழ் சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.13 மாநகராட்சி மணக்காடு துவக்கப்பள்ளி வளாகத்தில் தேசிய வாழ்வாதார மைய பயிற்சிக் கட்டிடம் (City level Livelihood Center) கட்டுவதற்காக, மதிப்பீடு தொகை ரூ.9.99/– இலட்சத்தில் 29.01.2016ம் தேதி பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

கட்டிட அனுமதி

சேலம் மாநகராட்சியின் 4 வார்டு அலுவலகங்களில் 2015–2016 ம் ஆண்டில் 1,161 எண்ணிக்கையில் கட்டிட விண்ணப்பங்கள் பெறப்பட்டு 1,058 இனங்களுக்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்டு இதன் மூலம் ரூ.65.35 இலட்சம் வருவாய் பெறப்பட்டுள்ளது.

அனுமதி பெறாத கட்டிடங்களுக்கு நீதிமன்ற நடவடிக்கை
(Un-authorized Constructions)

சேலம் மாநகராட்சியின் 4 வார்டு அலுவலகங்களில் அனுமதியற்ற கட்டிடங்களுக்கு சேலம் மாநகராட்சி சட்டம் 1994, பிரிவு 274, 283, 296 (1) (2) , 297 மற்றும் 447 ன் கீழ் 2015–16ம் ஆண்டில் சூரமங்கலம் வார்டு அலுவலகத்தில் 453 இனங்களுக்கும், அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்தில் 345 இனங்களுக்கும், அம்மாபேட்டைவார்டு அலுவலகத்தில் 290 இனங்களுக்கும், கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்தில் 683 இனங்களுக்கும் ஆக மொத்தம் 1,771 இனங்களுக்கும் தற்காலிக ஆணை மற்றும் உறுதி செய்யும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு சூரமங்கலம் வார்டு அலுவலகத்தில் 92 இனங்களுக்கும், அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்தில் 269 இனங்களுக்கும், அம்மாபேட்டை வார்டு அலுவலகத்தில் 15 இனங்களுக்கும், கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்தில் 36 இனங்களுக்கும் நீதிமன்ற நடவடிக்கை மூலம் ரூ.4,12,000/– வருவாய் பெறப்பட்டுள்ளது.

போக்குவரத்து நகர்வு திட்டம் (Comprehensive Mobility Plan)

சேலம் மாநகராட்சி மற்றும் சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் பகுதிகளில் வளர்ச்சி மற்றும் எதிர்கால தேவையினைகருத்திற் கொண்டு "ஒருங்கிணைந்த போக்குவரத்து நகர்வுதிட்டம்" தமிழ்நாடு நகர்புற நிதி மேம்பாட்டுகழகம் (TNUIFSL) அவர்களால் செயல்படுத்தப்படவுள்ளது. மேற்படி திட்டத்திற்கு திட்டஆலோசகராக M/s. CMD Smith. India Pvt.Ltd நிறுவனத்தினரை நியமனம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி நிறுவனம் சேலம் மாநகராட்சி மற்றும் சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டது. பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் பங்களிப்போர் கலந்தாலோசனை கூட்டம் (Stake holders Meeting) 20.12.2013, 27.02.2014, 25.06.2014 மற்றும் 24.12.2014 ஆகிய நாட்களில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் மாண்புமிகு மேயர், பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், மரியாதைக்குரிய துணைமேயர், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், லாரி உரிமையாளர் சங்கம், பேருந்து உரிமையாளர்கள் சங்கம், வட்டார போக்குவரத்து அலுவலர், உறுப்பினர் செயலர், சேலம் உள்ளூர் திட்டக் குழுமம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தலைமை பொறியாளர் தமிழ்நாடு மின்சாரவாரியம், வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இது குறித்து விரிவான இறுதி திட்ட அறிக்கை திட்டஆலோசகர்களால் அரசுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

பூங்காக்கள் மேம்பாடு

சேலம் மாநகராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் உள்ள பூங்கா ஒதுக்கீடு இடங்களில் தேர்வு செய்யப்பட்டுள்ள 5 பூங்காக்களுக்கும் ரூ. 138.30 இலட்சம் மதிப்பீட்டில் நகர் மற்றும் ஊரமைப்பு துறையின் திட்ட நிதி உதவியுடன், பூங்கா மற்றும் விளையாட்டு திடல் மேம்பாட்டு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து, நிர்வாகஅனுமதி வழங்கிட வேண்டி திட்ட முன் மொழிவுகளை நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்கள் மூலமாக தலைவர், நகர் மற்றும் ஊரமைப்பு துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பி வைத்திட மாமன்ற தீர்மானம் எண்.280, நாள்: 23.01.2015 ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் கீழ்கண்ட பூங்காக்களில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள உரிய நிதி ஒதுக்கீடு செய்து, நிர்வாகஅனுமதி வழங்கக்கோரி நகராட்சி நிர்வாகஆணையர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

வ. எண்	கோட்டம் எண்	பணியின் பெயர்	தொகை ரூ. இலட்சத்தில்
1	3	சூரமங்கலம் வார்டுஅலுவலகம் கோட்டம் எண் 3 அசோக் நகர் பூங்காமேம்பாட்டுபணி	13.50
2	5	அஸ்தம்பட்டி வார்டுஅலுவலகம் கோட்டம் எண். 5 சோனாநகர் பூங்கா மேம்பாட்டு பணி	29.90
3	8	அஸ்தம்பட்டி வார்டுஅலுவலகம் கோட்டம் எண். 8 கம்பர் தெரு பூங்கா மேம்பாட்டு பணி.	19.90
4	9	அம்மாபேட்டை வார்டுஅலுவலகம் கோட்டம் எண். 9 எஸ்.கே. டவுன்சிப் பூங்கா மேம்பாட்டு பணி.	25.00
[redacted]		**மொத்தம்**	88.30

தனிக்குடிநீர் திட்டம் (ரூ.32054.00 லட்சம்)

சேலம் மாநகராட்சி பகுதிவாழ் பொதுமக்களுக்கு 7 முதல் 10 நாட்களுக்கு ஒருமுறை மட்டுமே குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. இது பொதுமக்களின் பயன்பாட்டுக்கு போதுமானஅளவு இல்லாததாலும் குடிநீர் விநியோகத்தினை சீரமைக்கும் பொருட்டும் மாநகர மக்களின் நலன் கருதியும் சேலம் மாநகராட்சிக்கென தனியாக தனிகுடிநீர் திட்டத்தினை செயல்படுத்திட ரூ.32,054.00 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக அனுமதியினை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண் 57, நாள். 11.06.2012ன் மூலம் வழங்கப்பட்டது.

தனிக்குடிநீர் திட்டம் நிலை–Iக்கான திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு விரைவுபடுத்தி கடந்த 28.02.2014 முதல் சோதனை ஓட்டம் நடைபெற்று பின்னர் 28.12.2015-ம் தேதி முதல்

தமிழக அரசால் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. தற்போது தினந்தோறும் 102 எம்எல்டி வீதம் குடிநீர் எடுக்கப்பட்டு மாநகர பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு 2 முதல் 4 நாட்களுக்கு ஒருமுறை சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தில் நிலைஒன்றுக்காக இதுவரை ரூ.19,930.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்குண்டான நிதி ஆதாரங்களில் மாநகராட்சி தனது பங்கு தொகையாக ரூ. 3,500.00 இலட்சம் செலுத்த வேண்டுமென அனுமதிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லாத காரணத்தினால் அரசாணை எண்: 13, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்சி2) நாள் 12.01.2015ல் ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி திட்டத்தின் கீழ் (IUDM) ரூ.3,058.00 இலட்சத்தை வட்டியில்லா கடனாக மூன்று ஆண்டுகளுக்குள் திருப்பி செலுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் உத்திரவு பெறப்பட்டுள்ளது.

தனிக்குடிநீர் திட்டம் நிலை–IIல், மாநகர பகுதியில் புதியதாக 68 கி.மீ நீளத்திற்கு குடிநீர் பிரதான குழாய்கள் பதிக்கும் பணியில், 66.15 கி.மீ குழாய்கள் பதிக்கப்பட்டு மீதமுள்ளபணிகள் நடைபெற்று வருகிறது. 22 மேல் நிலை நீர்தேக்க தொட்டிகள் கட்டும் பணியில் 21 மேல் நிலை நீர் தேக்க தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு 15 நீர் தேக்க தொட்டிகள் சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. 6 பணிகள் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டத்திற்கு தயாராக உள்ளது. மேலும் குடிநீர் பகிர்மான குழாய்கள் 135.கி.மீ நீளம் பதிக்கப்பட வேண்டியதில் 128.15 கி.மீ நீளத்திற்கு குழாய்கள் பதிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நிலை இரண்டுக்காக இதுவரைரூ.11,341.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பாதாளசாக்கடை திட்டம் (ரூ. 14,939.00 லட்சம்)

சேலம் மாநகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டத்தினை ரூ 14,939.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு ஆணை எண்: 60 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 23.02.2006ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 3 சிப்பங்கள் கழிவு நீர் சேகரிக்கும் குழாய் பதிக்கும் பணியாகவும் 4 சிப்பங்கள் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணியாகவும் மேற்கொள்ளபட்டது.

இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம் கீழ் கண்டுள்ளவாறு அனுமதிக்கப்பட்டுள்ளது.

டிஎன்யுடிபி மான்யம்	**- ரூ. 1,000.00 இலட்சம்**
டிஎன்யுடிபி கடன்	**- ரூ. 6,054.00 இலட்சம்**
மாநகராட்சி மற்றும் பொதுமக்களின் பங்கு தொகை	**- ரூ. 7,885.00 இலட்சம்**
மொத்தம்	**- ரூ.14,939.00 இலட்சம்**

இதில் பொதுமக்களின் பங்கு தொகையினை திரட்டி பணியினை மேற்கொள்வதற்கு காலதாமதம் ஏற்படுவதால் அரசாணை எண்: 13, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்ஏ2) நாள் 11.01.2015ல் ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி திட்டத்தின் கீழ் (IUDM) ரூ.1,000.00 இலட்சம் மானியமாகவும் ரூ. 6,800.00 இலட்சம் வட்டியில்லா கடனாக மூன்று ஆண்டுகளுக்குள் திருப்பி செலுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் உத்திரவு பெறப்பட்டுள்ளது.

கழிவு நீர் குழாய் பதிப்பதற்காக சிப்பம் 1 மற்றும் சிப்பம் 3–க்குரிய பணிகளை செய்ய வேண்டிய ஒப்பந்ததாரர் திருவாளர் பிஎஸ்விசிபிஎல் – பிபிஐபிஎல் (ஜேவி) என்ற நிறுவனம் பணியினை செய்யாமல் இருந்ததால் மேற்படி ஒப்பந்தத்தினை மாமன்றம் தனது தீர்மான எண்: 98 மற்றும் 99 நாள் 11.07.2013ல் ரத்து செய்தது.

மேற்படி விடுபட்ட பணியினை மேற்கொள்ள உரிய ஒப்பந்தப்புள்ளிகள் 13.02.2014ல் கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். சுப்பையா கன்ஸ்டிரக்சன் கம்பெனி லிமிட் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணிஆணை 06.03.2015ல் வழங்கபட்டு பணி நடைபெற்று வருகிறது.

3 சிப்பங்களும் சேர்த்து மொத்தம் பதிக்கவேண்டிய 401.22 கி.மீட்டர் கழிவு நீர் சேகரிக்கும் குழாய்களில், 249.53 கி.மீட்டர் நீளத்திற்கு பதிக்கப்பட்டும் அதற்கான ஆள் இறங்கும் தொட்டிகளும் கட்டப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மேலும் மேற்படி கழிவு நீர்சேகரிக்கும் குழாய்கள் மூலம் பெறப்படும் கழிவுநீரை நவீன முறையிலான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் 4 இடங்களில் புவி அமைப்புக்கு ஏற்ப வடிவமைத்து, கட்டி, இயக்கி, பராமரித்து, திரும்ப ஒப்படைக்கும் (DESIGN BUILD OPERATE TRANSFER) முறையில் அமைக்கப்பட்டுவருகிறது. அதன் விபரம் பின்வருமாறு

1) வெள்ளக்குட்டை (13 எம் எல்டி) பணிகள் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டத்திற்கு தயாராக உள்ளது.

2) வண்டிப்பேட்டை (44 எம் எல் டி) பெறும்பான்மையான பணிகள் முடிக்கப்பட்டுள்ளது மீதமுள்ள பணிகள் 29.02.2016க்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3) மான்குட்டை (35 எம் எல்டி) பணிகள் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டத்திற்கு தயாராக உள்ளது.

4) அணைமேடு (6 எம் எல்டி) பெறும்பான்மையான பணிகள் முடிக்கப்பட்டுள்ளது மீதமுள்ள பணிகள் 29.02.2016 க்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் இதுவரைரூ.10,609.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பாதாளசாக்கடை திட்டத்தில் கழிவுநீர் குழாய் பதிக்க வெட்டப்படும் சாலையினை உடனடியாக பொதுமக்கள் பயன்படுத்திடும் வகையில் சீர்செய்யப்பட்டு வருகிறது.

மாநகராட்சி நிதி மற்றும் அரசின் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப தார் சாலைகள் அமைக்கப்பட்டு வருகிறது. இதுவரை பாதாளசாக்கடை குழாய்கள் பதிக்க வெட்டப்பட்ட 249.53 கி.மீ சாலையில், 127.35 கி.மீ நீளத்திற்கு தார்சாலைகள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன் பாட்டில் உள்ளது. 2016–2017ம் நிதி ஆண்டில் 122.05 கி.மீ நீளத்திற்கு தார்சாலை அமைக்கப்படவுள்ளது. மீதமுள்ள பழுதடைந்த சாலைகள் நிதி ஒதுக்கீடு பெற்று படிப்படியாக சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.